# CAUSEWAY AUTOMOTIVE




# தயாரிப்புக்களின் பாவனைக் கைநூல்

# முன்னுரை

கோஸ்வே பெயின்ட்ஸ் நிறுவனம் உலகில் வளர்ச்சி கண்ட நாடுகளில் மிக உயரிய நவீன தொழில்நுட்பத்தில் தயாராகும் புதிய உற்பத்திகளையும், புது நுட்பங்களையும் என்றும் இலங்கை நிறந்தீட்டல் துறைக்கு அர்ப்பணித்துவரும் நிறுவனமாகும். அக்காரணத்தால் இலங்கையில் வர்ணம் தீட்டும் கலைஞர்களின் பெருமதிப்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானது எமது நிறுவனம் பெற்ற மற்றுமொரு வெற்றியாகும்.

வாகனத்துறையில் காலத்தின் தேவையை நன்குணர்ந்து வாகன வர்ணம் தீட்டும் கலைஞர்களது அறிவினை மேம்படுத்தும் நோக்கத்தில் வெளிவரும் இக்கைநூல் உங்களுக்கும் புதியதோர் அனுபவமாய் அமையுமென்பது எமது நம்பிக்கையாகும். இவ்வேளையில் நிறுவன முகாமைத்துவத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்பைப் பெரிதும் மதிப்பதுடன், எதிர்காலத்திலும் இது போன்ற உன்னத கைங்கரியங்களுக்கு அவர்கள் பங்களிப்பு நல்கு வார்களென நம்புகிறோம்.

தொழில்நுட்பப்பிரிவு

CAUSEWAY AUTOMOTIVE

## உள்ளடக்கம்

### மேற்பரப்புப் பூச்சு வகை - Surface Preparation


| | | |
|---|---|---|
| ஸனி பெயின்ட் ரிமுவர் | - Sunny Paint Remover | 01 |
| கோஸ்வே ஈஸி கட் (மெட்டல்பிலர்) | - Causeway Easy cut Metal Filler | 02 |
| பைன் ஸ்டொப்பர் | - Dine Stopper | 03 |
| எட்ச் பிரைமர் | - Etch Primer | 04 |
| பிளாஸ்டிக் பிரைமர் 100 | - Plastic Primer 100 | 05 |


### பிரைமர் மற்றும் பிலர் - Primer & Filler


| | | |
|---|---|---|
| ஒயில் பிரைமர் QD | - Oil Primer QD | 06 |
| ஸின்க் பொஸ்பேட் பிரைமர் QD | - Zine Phosphate Primer QD | 07 |
| ஸனி NC பிரைமர் | - Sunny NC Primer | 08 |
| ஸனி NC பட்டி | - Sunny NC Putty | 09 |
| ஸனி NC பிலர் | - Sunny NC Filler | 10 |
| ஸனி 2K ரெப்பிட் பிரைமர் ஸர்பேஸர் (2:1) | - Sunny 2K Rapid Primer Surfacer (2:1) | 11 |
| ஸ்டார் கிளாஸ் 2K பிரைமர் (4:1) | - Star Class 2K Primer (4:1) | 12 |


### பெயின்ட் வகைகள் (ஸொலிட், பேர்ல் மெட்டலிக்) - Paint Range (Solid, Pearl Metallic)


| | | |
|---|---|---|
| ஸனி ஹைபில்ட் லெக்கர் (ஸொலிட் நிறங்கள்) | - Sunny Hi-Build Lacquer (Solid Colours) | 13 |
| ஸனி ஹைபில்ட் லெக்கர் (மெட்டலிக்/பேர்ல் வர்ணங்கள்) | - Sunny Hi-Build Lacquer (Metallic/Pearl Colours) | 14 |
| கோச் பினிஷ் பெயின்ட் | - Coach Finish Paint | 15 |


### விஷேட வாகனப் பூச்சு வகை - Special Vehicle Paint


| | | |
|---|---|---|
| ஹெமர் டோன் பினிஷ் | - Hammer Tone Finish | 16 |
| கோஸ்வே ரின்கல் பெயின்ட் (கறுப்பு) | - Causeway Wrinkle Paint (Black) | 17 |
| கோஸ்வே புளரஸன்ட் பெயின்ட் | - Causeway Fluorescent Paint | 18 |
| கோஸ்வே அன்டர்பொடி ஸீல் | - Causeway Underbody Seal | 19 |
| கோஸ்வே அன்டர் பொடி மெட் பிளக் (பிரீமியம்) | - Causeway Underbody Matt Black (Premium) | 20 |


### 2K ஸொலிட் - 2 K Solid


| | | |
|---|---|---|
| ஸ்டார் கிளாஸ் 2K - ஒட்டோ பெயின்ட்ஸ் | - Star Class 2K Auto Paints | 21 |


### கிளியர் லெக்கர் - Clear Lacquer


| | | |
|---|---|---|
| ஸனி 48 கிளியர் | - Sunny 48 Clear | 22 |
| கோஸ்வே எக்ரிலிக் கிளியர் 800S | - Causeway Acrylic Clear 800S | 23 |
| கோஸ்வே ஹை க்ளொஸ் 2K கிளியர் 4:1 | - Causeway Hi-gloss 2K Clear 4:1 | 24 |
| ஸனி 2K கிளியர் 4:1 | - Sunny 2K Clear 4:1 | 25 |
| ஸனி 2K ஹைஸொலிட் கிளியர் (2:1) | - Sunny 2K HS Clear (2:1) | 26 |
| ஸ்டார் கிளாஸ் 2K - கிளியர் (2:1) | - Star Class 2K Clear (2:1) | 27 |
| ஸனி 2K மெட் கிளியர் 4:1 | - Sunny2K Matt Clear 4:1 | 28 |


### துணைப்பொருட்கள் - Ancillaries


| | | |
|---|---|---|
| மெட்டிங்பேஸ் | - Matting Base | 29 |
| கிளியர்பேஸ் / ரப்பிங் கம்பவுன்ட் | - Clear Base / Rubbing Compound | 30 |


### தினர் தொகுதி - Thinner Range


| | | |
|---|---|---|
| தினர் தொகுதி | - Thinner Range | 31 |


### ஹார்ட்னர் தொகுதி - Hardener Range


| | | |
|---|---|---|
| ஹார்ட்னர் தொகுதி | - Hardener Range | 32 |


CAUSEWAY AUTOMOTIVE

## ஸனி பெயின்ட் ரிமூவர் (Sunny Paint Remover)

எந்தவொரு மேற்பரப்பின் மீதும் மிகக் கடுமையாக ஒட்டியிணைந்துள்ள ஏற்கனவே பூசப்பட்ட பெயின்ட் படலங்களை நீக்கிக்கொள்ளப் பாவிக்கக்கூடிய தயாரிப்பாகத் திகழ்கிறது பெயின்ட் ரிமூவர். இது ஜெல் போன்ற களிம்புத் தன்மையுடன் தயாரிக்கப்பட்டுள்ளதால் அதனை மிகச் சிறப்பாய்ப் புரிகிறது. திரவ வகையான தயாரிப்புகளை விட அதிக பகுதிகளை இதன் மூலம் நீக்கிக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.




- பொதி : 1 kg உலோகப் பொதியில்
- வர்ணம் : வர்ணமற்றுத
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : பெயின்ட் பூசப்பட்ட எந்தவோர் உலோக மேற்பரப்புக்கும்.
- கலவை விகிதாசாரம் : இல்லை. (நேரடியாகப் பாவனைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : தயார் செய்தல் அவசியமில்லை. பெயின்ட் நீக்கப்படவேண்டிய பகுதியை மட்டும் முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : தூரிகையொன்றின் (Brush) துணைகொண்டு அகற்றப்பட வேண்டிய பெயின்ட் படலம் மீது பூசவும். சுமார் 5-10 நிமிடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் அகற்றவும். அதற்கென பொருத்தமான சுரண்டி (Scrapper) ஒன்றைப் பயன்படுத்தவும்.
- பூசப்பட வேண்டிய தடவைகள் : அகற்றப்பட வேண்டிய பெயின்ட் படலத்தின் கன அளவில் தங்கியுள்ளது.
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : Paint Remover கொண்டு பெயின்ட் அகற்றப்பட்ட முழுப்பகுதியையும் கொதிக்கும் சுடுநீரால் (Hotwater) கழுவிக் கொள்ளவும். அதன் பின் தேவைக்கமைய மேற்பரப்பைத் தயார் செய்து அடுத்த பூச்சுகளைப் பூசிக்கொள்ளவும்.
- முக்கிய குறிப்பு : Paint Remover பாவிக்கும்போது முறையான பாதுகாப்பு விதிகளை அனுசரித்துத் தற்காப்புக் கையுறைகளை அணியவும். அதேபோல் பொசுக்கிவிடக் கூடிய தன்மை உள்ளதால் சிறுபிள்ளைகளுக்கு எட்டாதபடி தொலைவாக்கி வைக்கவும்.

# கோஸ்வே ஈஸிகட் (மெட்டல் பிலர்) Causeway Easy Cut Metal Filler

மோட்டார் வாகனங்களுக்கு மீண்டும் வர்ணம் தீட்டும்போது ஒவ்வொரு மேற்பரப்பினதும் உரிய வடிவமைப்பை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காகப் பூசப்படுமொரு பூச்சாகும். இதிலுள்ள சிறப்பான குணாம்சங்களாகப் பூசப்பட்ட மேற்பரப்புடன் நன்கு ஒட்டுதல், வேலைசெய்ய இலகுவான தன்மை, இசைந்து கொடுக்கும் தன்மை, விரைவில் உலர்தல், மற்றும் வெட்டி மட்டமாக்கக் கூடிய வசதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.




- பொதி : 300ml / 500ml / 1.5 Litre / 4 Litre
- வர்ணம் : இள மஞ்சள் நிறமானது.
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மோட்டார் வாகன வர்ணப் பூச்சுக்குரிய உலோக மேற்பரப்புகளின் மீது.
- கலவை விகிதாசாரம் : பேஸ் - 100 ஹார்ட்னர் - 2
- மேற்பரப்பைத் தயார்செய்தல் : உலர்ந்த மணல் கடுதாசி மூலம் தேவையான அளவுக்கு வெட்டி (80P - 220P) மெட்டல் பிலர் பூசத்தக்க மேற்பரப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். டிகிரிஸர் மூலம் நன்கு சுத்திகரித்துக் கொள்ளுங்கள்.
- பூசுதல் : உரிய அளவுக்கு ஹார்ட்னர் இட்டு நன்கு கலவை செய்யவும். அதன்பின் மெல்லிய பூச்சாக உரிய வடிவமைப்பைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அளவுக்குப் பூசிவிடவும். (3 min - 5 min நிமிடங்களில் பூசி முடிக்கவும்)
- பூசப்பட வேண்டிய தடவைகள் : மேற்பரப்பின் உரிய வடிவமைப்பைப் பெறும் வரை பூச வேண்டிய தடவைகள் ஒன்றுக் கொன்று மாறுபடலாம்.
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் - 03 - 04 நிமிடங்கள்<br>முழுமையாய் உலர்தல் - 30 - 40 நிமிடங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 3 mm ஒரு தடவை பூசுகையில்
- மேற்பரப்புக்கான வர்ணப்பூச்சு : கோஸ்வே ரக எந்தவொரு பிரைமர் பிலர் வகையும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : சுமார் 03 அல்லது 05 நிமிடங்கள் வரை.
- முக்கிய குறிப்பு : முழுமையாய் உலர்ந்தபின் ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும்.

## பைன் ஸ்டொப்பர் Fine Stopper

மீள வர்ணம் தீட்டலின்போது மேற்பரப்பைத் தயார் செய்வதைச் சுலபமாக்கும் வகையில் பைன் பொலியெஸ்டர் இட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது. வண்ணம் தீட்டிய மேற்பரப்புக்கு மிக உயரிய முழுமையைப் பெற்றுத்தருகிறது. சாதாரண மெட்டல் பிலர் பாவிப்பதால் தோன்றும் பிரச்சினைகள் பெருமளவினை இதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். மிக இலகுவாகப் பாவிக்க முடிவதைப் போன்றே தொழில்சார் செயற்றிறனையும் மேம்படுத்துகிறது.




- பொதி : 1.5 Kg
- வர்ணம் : கிறீம் நிறம்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டலுக்குரிய எந்தவொரு மேற்பரப்பிலும்
- கலவை விகிதாசாரம் : பேஸ் - 100 ஹார்ட்னர் - 2
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மணல் கடுதாசி கொண்டு மேற்பரப்பை (80P-120P) தயாரித்துக் கொள்ளவும். டிகிரிஸர் மூலம் அப்பகுதிகளைச் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசப்பட வேண்டிய தடவைகள் : உரிய வடிவமைப்பைப் பெற்றுக் கொள்ளும் வரைக்கு முள்ள தடவைகள். அது சிதைவுற்ற இடங்களின் அளவுகளுக்கும், ஆழத்துக்கும் அமைய மாறுபடும்.
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் - 03 - 05 நிமிடங்கள்<br>மட்டப்படுத்தி உலர்தல் - 15 - 20 நிமிடங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : பூசப்பட்ட தடவைகளின் அளவுகளில் தங்கியுள்ளது.
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட கோஸ்வே அல்லது டிபெயார் பிரைமர் பிலர் பாவிக்கவும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : சுமார் 4 நிமிடங்கள்
- முக்கிய குறிப்பு : கன அளவு கூடிய நிரப்புதல்களுக்கு மெல்லிய பூச்சாகப் பாவிக்க வேண்டியதுடன் ஒவ்வொரு பூசும் தடவைகளுக்கும் இடையில் உலர்வதற்கு உரிய நேரத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.

# எட்ச் பிரைமர் Etch Primer

மீள வர்ணம் தீட்டும்போது, உலோகங்களைப் போன்றே உலோக சார்ந்த ஏனைய மேற்பரப்புகளான தகடு, அலுமினியம், கல்வனைஸ் போன்ற மேற்பரப்புகளுக்கும் நிகழக் கூடிய மாற்றங்களைக் கட்டுப்படுத்த இது தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் காற்றிலுள்ள ஒக்ஸிஜனுடன் சேர்ந்து ஒக்ஸைட் ஏற்படுவதன் மூலம் மேற்பரப்புகளில் ஏற்படக் கூடிய அரித்தலையும், பெயின்ட் கழன்று போதலையும் தடுத்து மிக உயரிய பாதுகாப்பினையும், ஒட்டும் தன்மையையும் மேற்பரப்புக்கு இது வழங்குகிறது.




- பொதி : 1 Litre / 4 Litre
- வர்ணம் : ஒளி ஊடுருவும் மஞ்சள் நிறம்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : அலுமினியம், கல்வனைஸ் மற்றும் தகடுமீது
- கலவை விகிதாசாரம் : பேஸ் : எக்டிவேட்டர் 1 : 1
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மணல் கடுதாசி கொண்டு மேற்பரப்பைத் தயார் செய்து கொள்ளவும் (80P - 220P) டிகிரிஸர் மூலம் அப்பகுதியைச் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : உரிய விகிதாசாரத்துக்குக் கலவை செய்து தூரிகையினால் அல்லது தெளிகருவி மூலம் பூசவும்.
- பூசும் தடவைகள் : தேவைக்கேற்ப 01 தடவை அல்லது அதற்கு மேல்
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் : 05 நிமிடங்கள்<br>மீள வர்ணம் தீட்டலுக்கு: 01 மணித்தியாலத்தின் பின்<br>முழுமையாய் உலர்தல்: 01 மணித்தியாலம்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 15-20 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : தேவைக்கமைய கோஸ்வே ரக எந்தவித பிலர் வகை மற்றும் பெயின்ட் வகை
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : சுமார் 08 மணித்தியாலங்கள்
- முக்கிய குறிப்பு : Etch Primer பாவிக்கும்போது தினர் அவசியமில்லை. மேற்பரப்புக்கான பூச்சினை 24 மணித்தியாலத்துக்கு முன் மேற்கொள்ளவும்.

## பிளாஸ்டிக் பிரைமர் 100 Plastic Primer 100

மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மேற்பரப்புகளின் மீது பெயின்ட் பூசப்படுவதற்கு முன்னர் பூசுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஒரு தயாரிப்பாகும். இதன் மூலம் இரண்டாம் முறை பூசப்படும் பூச்சுகளின் ஒட்டுத்தன்மை மேம்படுத்தப்படுகிறது.




- பொதி : 200ml / 1 Litre
- வர்ணம் : நிறமற்றது
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மோட்டார் வாகனங்களிலுள்ள பிளாஸ்டிக் மேற்பரப்புகளுக்கு
- கலவை விகிதாசாரம் : இல்லை. (நேரடியாக பாவனைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மேற்பரப்பை நன்கு கழுவித் துப்பரவு செய்து கொள்ளுங்கள். அடுத்து மணல் கடுதாசி கொண்டு தேவையான அளவுக்குத் தயார் செய்து கொள்ளவும். அதன்பின் என்டிஸ்டெடிக் டிகிரீஸர் இட்டுச் சுத்திகரித்துக் கொள்ளுங்கள்.
- பூசுதல் : முன்கூட்டியே தயார் செய்து கொள்ளப்பட்ட மேற்பரப்பில் தெளிகருவி கொண்டு பூசவும்.
- பூசும் தடவைகள் : மெல்லிய பூச்சாக 01 அல்லது 02 தடவைகள்
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 5 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 5 நிமிடங்கள்
  - மேற்பரப்புப் பூச்சு உலர்தல்: 30 நிமிடங்கள்
  - முழுமையான உலர்தல் : 30 நிமிடங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 5 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : எந்தவொரு கோஸ்வே பிலர் அல்லது பெயின்ட் வகை
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : மோட்டார் வாகனங்களுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட பிலாஸ்டிக் பரப்புகள் மீது மாத்திரம் பூசவும். ஏனைய பிலாஸ்டிக் வகைகளுக்குப் பாவிக்க வேண்டாம்.

## ஓயில் பிரைமர் QD Oil Primer QD

மோட்டார் வாகனங்களுக்கு மீள வர்ணம் தீட்டும்போது நேரடியாகவே தகடு மீது பூசக்கூடியதாகவும் எந்தவோர் உலோகம் சார்ந்த மேற்பரப்புக்குப் பூசக் கூடியதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளதொரு பிரைமர் வகையாகும். இதில் துருப்பிடிப்பதைத் தடுக்கக் கூடிய மூலகங்கள் அடங்கி உள்ளதால் நெடுங்காலம் மேற்பரப்பு பாதுகாக்கப்படுவதுடன் ஒட்டும் தன்மையும் மேம்படுத்தப்படுகிறது.




- பொதி : 200ml / 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : செம்பழுப்பு (Oxide Red)
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : எந்தவோர் உலோக மேற்பரப்புக்கும்
- கலவை விகிதாசாரம் : 15% தினர் (தூரிகை பாவித்தால்)<br>30% தினர் (தெளிகருவி பாவித்தால்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : தேவைக்கமைய (80P - 220P) மணல் கடுதாசி பயன்படுத்தி மேற்பரப்பைத் தயார் செய்யவும். அதன்பின் டிகிரிஸர் இட்டுச் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : தூரிகை (Brush) அல்லது தெளிகருவி (Spray) மூலம்
- பூசவேண்டிய தடவைகள் : 1 - 2 (பூசும் தடவைகளுக்கு இடையில் 5 முதல் 8 நிமிடமளவு காலம் வழங்கவும்.
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 8 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 1 மணித்தியாலம்
  - மட்டப்படுத்தி உலர்தல் : 1 மணித்தியாலம்
  - முழுமையாக உலர்தல் : 12-15 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 30 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : எந்தவொரு பிலர் வகை அல்லது எந்தவொரு பெயின்ட் வகை
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : பிரைமர் மாத்திரம் பூசியபின் நெடுநேரம் வெளிப்புறமாய்த் திறந்து வைக்காதீர்கள்.

# ஸின்க் பொஸ்பேட் பிரைமர் QD inc Phosphate Primer

உலோக மற்றும் உலோகம் சார்ந்த மேற்பரப்புகளுக்கு மட்டுமன்றி இரும்பு சார்ந்த தயாரிப்புகளுக்கும் பூசுவதற்குப் பரிந்துரைக்கப்படும். பிரைமர் வகையாகும். இதன் மூலம் அம்மேற்பரப்புகளுக்கு மிக உயர்ந்த பாதுகாப்பையும், மிக உயரிய ஒட்டும் தன்மையையும் பெற்றுத்தருகிறது. அதேபோல் துருப்பிடித்தலை எதிர்க்கக் கூடிய மூலகங்கள் அதிகம் கொண்டிருப்பதால் அந்நிலமை நெடுங்காலம் நின்று நிலைக்கிறது.




- பொதி : 200ml / 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : கறுப்பு மற்றும் சிவப்பு நிறங்கள்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : எந்தவோர் உலோக மேற்பரப்புக்கும் மற்றும் இரும்பு மீதும்.
- கலவை விகிதாசாரம் : தூரிகையால் 10% தினர், தெளிகருவி எனின் 15% தினர்
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மணல் கடுதாசி கொண்டு மேற்பரப்பைத் தேவையான அளவு தயார் செய்துவிட்டு அப்பகுதியை டிகிரிஸர் மூலம் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பூசும் முறைக்கமைய தினர் கலந்து 1 தடவை அல்லது 2 தடவை பூசவும்.
- பூசும் தடவைகள் : 1 - 2
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 10-15 நிமிடங்கள்
  - முழுமையான உலர்தல் : 12-15 மணித்தியாலங்கள்
  - மேற்பரப்பில் பூசுதல் : 8 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 30-35 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : எந்தவொரு கோஸ்வே பிலர் வகையோ அல்லது எந்தவொரு பெயின்ட் வகையும் (NC/ Enamel/ Industrial)
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : பிரைமரை மாத்திரம் பூசிவிட்டு நெடுங்காலம் வெளிப்புறமாய்த் திறந்து வைத்திருப்பதைத் தவிர்க்கவும்.

# ஸனி N/C பிரைமர் Sunny N/C Primer

NC வகையிலான பிரைமர் ரகமாகும். விரைவாக உலர்வது இதிலுள்ள சிறப்பம்சமாகும். மீள வர்ணம் தீட்டும்போது இதனை எந்தவொரு மேற்பரப்பில் பூசக்கூடியதாக அமைவதோடு வர்ணம் தீட்டும் செயல்முறையில் வினைத்திறனை மேம்படுத்துகிறது.




- பொதி : 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : பழுப்பு, சிவப்பு, கறுப்பு
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டலுக்குரிய உலோகமயமான மேற்பரப்புக்கு
- கலவை விகிதாசாரம் : பிரைமர் : தினர் 100 : 80
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : தேவையான மட்டத்துக்கு மணல் கடுதாசி மூலம் வெட்டி மேற்பரப்பைத் தயாரித்து அதனை டிகிரிஸர் இட்டுச் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட NC தினரை உரிய அளவுக்குக் கலந்து 2 அல்லது 3 தடவைகள் தெளிகருவி மூலமாய்ப் பூசவும்.
- பூசும் தடவைகள் : 2 - 3
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 8 - 10 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 8 - 10 நிமிடங்கள்
  - மட்டப்படுத்தி உலர்தல் : 1 மணித்தியாலம்
  - முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 20-25 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் போன்றே எந்தப் : கோஸ்வே தரும் எந்தவொரு பிலர் வகையையும் பெயின்ட் வகைகளையும் பூசமுடியும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : இதனை நேரடியாகத் தகடு மீது பூசுவதைவிட உயரிய பிரதிபலனை அடைவதற்கு மீள வர்ணம் தீட்டலுக்குத் தயார் செய்யப்பட்ட மேற்பரப்பொன்றில் பூசுவதன் மூலம் பெற முடியும். அதேபோல் பிரைமர் மாத்திரம் பூசிவிட்டு நெடுநேரம் வெளிப்புறமாய்த் திறந்து வைக்கலாகாது.

# ஸனி N/C பட்டி Sunny N/C Putty

மோட்டார் வாகனங்களுக்கு மீள வர்ணம் தீட்டும்போது, மேற்பரப்பைத் தயார் செய்வதற்காகப் பாவிக்கப்படும் NC வகையிலான பூசு பொருளாகும். இதன் மூலம் மேற்பரப்பிலுள்ள நுண்ணிய சிராய்ப்புகளையும், சிதைவுகளையும் நிரப்ப முடிவதோடு அவை மறைக்கப்பட்டு விடுவதன் மூலம் வர்ணம் தீட்ட உசிதமான மென்மையான மேற்பரப்பையும் பெறமுடிகிறது.




- பொதி : 200ml / 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : சாம்பல் / சிவப்பு
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டப்படத் தயாரிக்கப்பட்ட மேற்பரப்புகள் மீது நேரடியாகப் பூசமுடியும்.
- கலவை விகிதாசாரம் : N/A
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : -
- பூசுதல் : தட்டையான Pad தடித்த அட்டை மூலம் மெல்லிய பூச்சாக மேற்பரப்பிலுள்ள சிராய்ப்புகள், சிதைவுகள் மறையுமளவுக்குத் தேவைப்படும் தடவைகளுக்குப் பூசவும்.
- பூசும் தடவைகள் : மேற்பரப்பிலுள்ள முழுமைக்கமைய மாறுபடும்.
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் : 15 நிமிடங்கள்
  மீளப் பூசுதல் : 03 - 05 நிமிடங்கள்
  மட்டப்படுத்தி உலர்தல் :
  Wet Sand: 24 மணித்தியாலயங்கள்
  Dry Sanding: 45 நிமிடங்கள்
  முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலயங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 200 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : எந்தவொரு கோஸ்வே பிலர் வகையும் பூசலாம்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : பூசுவதற்கு முன்னர் மேற்பரப்பு சுத்திகரிக்கப் பட்டுள்ளதா என நிர்ணயித்துக் கொள்ளவும்.

## ஸனி N/C பிலர் Sunny N/C Filler

மோட்டார் வாகனங்களுக்கு மீள வர்ணம் தீட்டும்போது பாவிக்கக் கூடிய NC வகையிலான பிலர் ரகமாகும். இதிலுள்ள சிறப்பம்சங்களாக விரைவில் உலர்தல் எந்தவொரு பிரைமர் மீது போலவே ஏற்கனவே பூசப்பட்டுள்ள பெயின்ட் படலங்கள் மீதும் பூசக் கூடியதாக அமைதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதன் மூலம் விரைவாகவும், சுலபமாகவும் பூச உகந்த மென்மையுடன் மேற்பரப்பைப் பெறலாம்.




- பொதி : 200ml / 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : வெள்ளை, சாம்பல்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : பிரைமர் பூசப்பட்ட மேற்பரப்புகளின் மீது அல்லது ஏற்கனவே பூசப்பட்ட பெயின்ட் படலத்தின் மீது
- கலவை விகிதாசாரம் : 100 : 80 (பிலர் / தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மெல்லிய மணல் கடுதாசி கொண்டு வெட்டி (400P-800P) மேற்பரப்பைத் தயார் செய்து கொள்ளவும். அதன்பின் அப் பகுதியை டிகிரீஸர் மூலம் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட தினரை உரிய அளவில் கலந்து தேவைக்கமையப் பூசப்படவேண்டிய தடவைகள் தெளிகருவி மூலமாகத் தெளிக்கவும்.
- பூசும் தடவைகள் : 2 அல்லது 3 தடவைகள்
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 8 - 10 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 8 - 10 நிமிடங்கள்
  - மட்டப்படுத்தி உலர்தல் : 1 மணித்தியாலம்
  - முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 25 - 30 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : கோஸ்வே தரும் எந்தவொரு பெயின்ட் வகையையும் மேற்பரப்பில் பூசலாம்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : -


CAUSEWAY AUTOMOTIVE

## ஸனி 2k ரெப்பிட் பிரைமர் ஸர்பேஸர் (2-1) sunny 2k Rapid Primer Surfacer (2-1)

மோட்டார் வாகனங்களுக்கு மீள வர்ணம் தீட்டும்போதும் தொழிற்சாலைகளில் யந்திரோபகரணங்களுக்கும் பாவிக்கக் கூடிய 2k வகையிலான பிரைமர் ஸர்பேஸர் ரகமாகும். இதிலுள்ள சிறப்பம்சங்களாக மேற்பரப்பிலுள்ள சிராய்ப்புகளையும், சிதைவுகளையும் நிரப்பிய வண்ணம் மிக உயரிய முழுமையை மேற்பரப்புக்குப் பெற்றுத் தரும்.




- பொதி : 1 Litre
- வர்ணம் : சாம்பல் நிறம்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மோட்டார் வாகனங்களுக்கும் இயந்திரோபகரணங்களுக்கும் உரிய உலோகமய மேற்பரப்புகள் மீது
- கலவை விகிதாசாரம் : 2 : 1 (ரெப்பிட் பிரைமர் : ரெப்பிட் ஹாட்னர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : தேவையான முன் ஆயத்தங்கள் (Preparation) மேற் கொள்ளப்பட்ட பின் டிகிரீஸர் மூலம் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட விகிதாசாரத்துக்கமைய ஸர்பேஸர் ஹார்ட்னர் உடன் கலக்கப்பட்டு அதற்கு அதிகபட்சம் 40% வரை தினர் சேர்க்கப்பட்ட பின் தெளிகருவி மூலமாகப் பூசவும்.
- பூசும் தடவைகள் : 02 - 03
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  மேற்பரப்பு உலர்தல் : 05 - 10 நிமிடங்கள்
  மீள வர்ணம் தீட்டல் : 05 நிமிடங்கள்
  மேற்பரப்புப் பூச்சு உலர்தல் : 01 மணித்தியாலம்
  முழுமையான உலர்தல் : 01 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 30 - 35 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : எந்தவொரு கோஸ்வே பெயின்ட் வகையும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : $30^0$ C வெப்பநிலையில் 30 நிமிடங்கள்
- முக்கிய குறிப்பு : தெளிக்கும்போது (Spray செய்கையில்) 1.5 mm அளவை விடக் கூடிய Nozzle (குழாய்) கொண்ட ஸ்ப்ரே கன் ஒன்றைப் பாவிப்பது மிகப் பொருத்தமானது.

# ஸ்டார் கிளாஸ் 2k பிரைமர் 4:1 Star Class 2k Primer 4:1

ஸ்டார் க்ளாஸ் 2k பிரைமர் என்பது மற்றுமொரு சிறப்பான பிரைமர் ஸர்பேஸர் ரகமாகும். இதிலுள்ள சிறப்பம்சங்களாகத் துருப்பிடித்தலைத் தடுக்கக்கூடிய மூலகங்கள் அடங்கியிருப்பதையும், மிக உயரிய ஒட்டும் தன்மை கொண்டிருப்பதையும் குறிப்பிடலாம். அதேபோல் மிகச் சிறப்பாக மேற்பரப்பிலுள்ள முரண்பாடுகளை ஆகக் குறைந்ததாக்கி பெயின்ட் பூசப் பொருத்தமான மேற்பரப்பையும் பெற்றுத் தருகிறது.




- பொதி : 1 Litre
- வர்ணம் : கிறீம் (இளமஞ்சள்)<br>சாம்பல் நிறம்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டத் தயார் செய்யப்பட்ட மேற்பரப்புகள் மீதும் இயந்திரோபகரணங்களை பழுதுபார்ப்புகளின் போதும்
- கலவை விகிதாசாரம் : 100 : 25 : 40% பிலர் 100: ஹாட்னர் 25: தினர் 40
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மீள வர்ணம் தீட்டுதலுக்கான முன் ஆயத்தங்களைச் செய்து அடுத்ததாக டிகிரீஸர் மூலம் சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட விகிதாசாரத்துக்கமைய அதாவது 4:1 ஸர்பேஸர் மற்றும் ஹார்ட்னர் கலவை செய்து உச்சளவாக 40% வரை தினர் சேர்க்கவும். அதன்பின் ஸ்ப்ரே மூலமாகத் தெளிக்கவும்.
- பூசும் தடவைகள் : 01 அல்லது 03 (பூசும் தடவைகள் இரண்டுக்கிடையில் 5 - 10 நிமிடங்களுக்கு இடைவெளி வழங்கவும்)
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் : 10 நிமிடங்கள்,<br>மீள வர்ணம் தீட்டல் : 10 - 15 நிமிடங்கள்<br>மேற்பரப்புப் பூச்சு உலர்தல் : 03-04 மணித்தியாலம்,<br>முழுமையான உலர்தல் :12-16 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 40 - 60 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : கோஸ்வே தரும் எந்த ரகப் பெயின்ட்டும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : 01 மணித்தியாலம்
- முக்கிய குறிப்பு : தெளிகருவியால் ஸ்ப்ரே செய்யும்போது 1.5 mm அளவுக்கு மேற்பட்ட Nozzle (குழாய்) கொண்ட ஸ்ப்ரே கன் ஒன்றைப் பாவிக்கவும்.

## ஸனி ஹை-பில்ட் லெக்கர் (ஸொலிட்) Sunny High Build Lacquer (Solid)

மோட்டார் வாகனங்களை மீள வர்ணம் தீட்டுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள NC வகையிலான பெயின்ட் ரகமாகும். இதிலுள்ள சிறப்பம்சங்களாக மிக விரைவில் உலர்தல், ஏற்கனவே பூசப்பட்ட பெயின்ட் படலத்தின் மீது நன்கு ஒட்டிக்கொள்ளும் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மீள வர்ணம் தீட்டத் தேவையான தனிவர்ணங்கள் (Solid Colour) ஏராளமாய்க் கொண்ட மிக விசாலமான வர்ண அட்டை (Colour Card) மூலம் மிகச்சுலபமாக உரிய வர்ணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.




- பொதி : 500ml/ 1 Litre / 4 Litre
- வர்ணம் : வர்ண அட்டை மூலம் தேர்ந்தெடுக்கலாம்.
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டத் தயார் செய்யப்பட்ட மேற்பரப்புகள் மீது
- கலவை விகிதாசாரம் : 1:1 (பெயின்ட் : தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மெல்லிய மணல் கடுதாசி மூலம் பெயின்ட் படலத்தை வெட்டி (400P - 800P) மென்மையான மேற்பரப்பை ஏற்படுத்தி அதைத் திரும்பவும் டிகிரீஸர் மூலம் நன்கு சுத்திகரித்துக் கொள்ளவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட தினரை (கோஸ்வே N/C Sunny Auto) உரிய அளவில் கலந்து தெளிகருவி வழியாகப் பூசவும்.
- பூசும் தடவைகள் : 1 அல்லது 2
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 8 - 10 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 10 - 15 நிமிடங்கள்
  - மட்டப்படுத்தி உலர்தல் : 1 மணித்தியாலம்
  - முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 25 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : மிக உயரிய முழுமையைப் பெற்றுக் கொள்ள 2k Top Coat லெக்கர் பூசலாம். அதனால் வர்ணமும், பிரகாசமும் மாறாமல் நீண்ட காலம் நின்று நிலைக்கும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : பெயின்டை மாத்திரம் பூசும்போது கிடைக்கும் பூரணத்துவத்தை மாற்றிக் கொள்ளத் தேவைப்பட்டால், மினுக்கத்தை மேம்படுத்த Clear 48 பாவிக்கவும். அதேபோல் பிரகாசத்தைக் குறைத்துக் கொள்ள Matting Base பாவிக்கவும்.

## ஸனி ஹைற-பில்ட் லெக்கர் (மெட்டலிக் பேர்ல்) Sunny Hibuild Liquor Metallic Pearl

மோட்டார் வாகனங்களை மீண்டும் வர்ணம் தீட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள NC வகையிலான பெயின்ட் ரகமாகும். இதிலுள்ள சிறப்பம்சங்களாக விரைவில் உலர்தல் உட்பட வேலை சுலபமாதல் மற்றும் ஏற்கனவே பூசப்பட்ட பெயின்ட் படலத்தின் மீது கூட மிக நன்றாக ஒட்டும் தன்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மீள வர்ணம் தீட்டும்போது தேவையான பேர்ல் (Pearl) அல்லது மெட்டலிக் (Metalic) வர்ணங்கள் ஏராளமானவற்றை வர்ண அட்டைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.




- பொதி : 1 Litre
- வர்ணம் : வர்ண அட்டை மூலம் தேர்ந்தெடுக்கலாம்
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : மீள வர்ணம் தீட்டுவதற்கெனத் தயார் செய்யப்பட்ட மேற்பரப்புகள் மீது
- கலவை விகிதாசாரம் : 1:1 (பெயின்ட் : தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : தேர்ந்தெடுத்த வர்ணத்துக்குப் பொருத்தமாகக் கீழ்ப் பூச்சைப் (Under coat) பூசிய பின்னர் அதனை மெல்லிய மணல் கடுதாசி (600P-1000P) கொண்டு வெட்டி மீண்டும் டீகிரிஸர் செய்து சுத்திகரிக்கவும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட தினரை (Sunny AAA) உரிய அளவில் கலந்து தெளிகருவி மூலம் ஸ்ப்ரே செய்து பூசவும்.
- பூசும் தடவைகள் : 1 அல்லது அதைவிடக் கூடிய அளவு (குறித்த வர்ணம் கிடைக்கும் வரையான தடவைகள்)
- உலர்வதற்குச் செல்லும் காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 10 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : 10 - 15 நிமிடங்கள்
  - மட்டப்படுத்தி உலர்தல் : 1 மணித்தியாலம்
  - முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 20 - 25 $\mu m$
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : பூரணத்துவத்தைப் பெறக் கட்டாயமாக 2 K Top Coat லெக்கர் பூசப்படுதல் வேண்டும்.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : தேர்ந்தெடுக்கும் வர்ணத்துக்குப் பொருத்தமாகக் கீழ்ப்பூச்சொன்றை (Under coat) பூசுவதன் மூலம் உயரிய முழுமையைப் பெற்றுக் கொள்ளலாம். முழுமையான வர்ணம் தீட்டும்போது ஒரே தொகுதி சார்ந்த பெயின்ட்டை மாத்திரம் பாவிக்கவும். Touch up செய்யும்போது வர்ணப் பொருத்தம் மேற்கொள்ளவும்.

# கோச் பினிஸ் ஒட்டோ க்ளொஸ் Coach Finish Paint

மோட்டார் வாகனங்கள், உலோகமயமான, மரத்திலான மேற்பரப்புகள் மீது பூசக் கூடிய பெயின்ட் ரகமாகும். காலநிலை மாற்றங்களுக்கும் இரசாயன மாற்றங்களுக்கும் ஈடுகொடுப்பதோடு கூடுதல் மினுக்கத்தையும் பேணுகிறது. விரைவில் உலர்வதுடன் பாவனைக்கும் சுலபமானது.




- பொதி : 1 Litre /4 Litre
- வர்ணம் : கிளியர் / ஏனைய ஏற்ற நிறங்கள்
- பரிந்துரைக்கப்படும்
- மேற்பரப்புகள் : மோட்டார் வாகன மேற்பரப்புகள் மற்றும் உலோகமய மரத்திலான மேற்பரப்புகள் மீது
- கலவை விகிதாசாரம் : 25 % (டர்பன்டைன் / தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : மோட்டார் வாகனங்கள் எற்கனவே பூசப்பட்டுள்ள பெயின்ட் படலத்தை 400P - 600P போன்ற மணல் கடுதாசிகளால் வெட்டி மட்டப்படுத்திக் கொள்ளவும். உலோகமய மேற்பரப்புகள் 200P - 320P மணல் கடுதாசிகளாலும் மரத்திலான மேற்பரப்புகள்180P - 320P உலர்ந்த மணல் கடுதாசிகளாலும் மட்டப் படுத்தப்படல் வேண்டும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட கோஸ்வே டர்பன்டைன் அல்லது தினர் 25% அளவில் கலக்கப்பட்டு தெளிகருவியால் ஸ்ப்ரே செய்வதன் மூலமாக அல்லது பிரஷ்ஷினால் (தூரிகை) பூசப்படல் வேண்டும்.
- பூசும் தடவைகள் : 1 அல்லது 2 (பூசும் தடவைகள் இரண்டுக்கும் இடையில் 10 நிமிட இடைவெளி வழங்கவும்.)
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் : 90 நிமிடங்கள்  
  மட்டப்படுத்தி உலர்தல்  
  முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 30 – 40 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் அவசியமில்லை.
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : N/A

## ஹெமர் டோன் பினிஷ் Hammer Tone Finish

உலோகமய மேற்பரப்புகள், விசேடமாக உருக்கு வீட்டுத் தளப்பாடங்கள் மீது பூசக் கூடியதொரு தயாரிப்பாகும். பூசப்பட்டபின் கிரமமான முறையில் அலங்காரமாய்ப் பெயின்டின் படலம் அமைவதுடன் ஏனைய பெயின்ட் படலங்களைவிட மாறுபட்ட சிறப்பான ஹெமர் முழுத் தோற்றத்தை மேற்பரப்பில் காணமுடியும்.




- பொதி : 1 Litre / 4 Litre
- வர்ணம் : 12 வர்ணங்கள் கொண்ட தேர்ந்தெடுக்க வசதியான கூடிய வர்ண அட்டை ஒன்று உண்டு.
- பரிந்துரைக்கப்படும் மேற்பரப்புகள் : உலோக மேற்பரப்புகளுக்களும் பிரைமர் பூசப்பட்ட மேற்பரப்புகளும்
- கலவை விகிதாசாரம் : 100 : 10 (பெயின்ட் : தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : எண்ணெய், கிறீஸ், தூசுகள் அற்றதாய் டிக்ரீஸர் மூலம் சுத்திகரிக்கப்பட்ட உலோக மற்றும் பிரைமர் பூசிய மேற்பரப்புகள்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட தினர் 10% கலந்து தெளிகருவி மூலமாக அல்லது திரவமாக்காமல் ரொலர் பிரஷ் மூலம் பூசவும்.
- பூச வேண்டிய தடவைகள் : 1
- உலர்வதற்குச் செல்லும்காலம் :
  - மேற்பரப்பு உலர்தல் : 30 நிமிடங்கள்
  - மீள வர்ணம் தீட்டல் : -
  - மட்டப்படுத்தி உலர்தல் : -
  - முழுமையான உலர்தல் : 16 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 25 - 35 $\mu$m
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : N/A
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : பரிந்துரைக்கப்பட்ட தினரை மாத்திரம் கலக்கவும். தினரின் அளவு கூடுவதன் மூலம் மேற்பரப்பில் ஹெமர் தோற்றப் பொலிவு மாறுபடலாம்.

## கோஸ்வே ரின்கல் பெயின்ட் (கறுப்பு) Causeway wrinkle Paints (Black)

கோஸ்வே ரின்கல் பெயின்ட் பூசிய பின்பு மேற்பரப்பு விசேடமான தோற்றப்பொலிவுடன் சுருக்கம் விழுந்த தன்மையோடு தென்படும். பூசப்பட்ட மேற்பரப்பு நன்கு சூடாகி இருப்பின் மேற்பரப்பில் சுருக்கம் போன்ற வடிவமைப்பு சமச்சீராக மேற்பரப்பெங்கும் பரவிக் காணப்படும். இத்தயாரிப்பு மூலம் மோட்டார் வாகனப் பகுதிபாகங்களுக்கும், உலோக, பிளாஸ்டிக் உபகரணங்களுக்கும் நேர்த்தியான முழுமை கிடைக்கும்.




- பொதி : 1 Litre
- வர்ணம் : கறுப்பு
- பரிந்துரைக்கப்படும்
- மேற்பரப்புகள் : ஆரம்பப் பூச்சுடன் தயார் செய்யப்பட்ட உலோக, பிளாஸ்டிக் மற்றும் மரத்தாலான மேற்பரப்புகள் மீது
- கலவை விகிதாசாரம் : 10 % (NC தினர்)
- மேற்பரப்பைத் தயார் செய்தல் : கீழ்ப் பூச்சாக : (Under Coat)
  உலோகம் : மெட்டல் பிரைமர்
  பிளாஸ்டிக் : பிளாஸ்டிக் பிரைமர்
  அலுமினியம் : ETCH பிரைமர்
  பூசப்படல் வேண்டும்.
- பூசுதல் : பரிந்துரைக்கப்பட்ட தினரை (NC Thinner) தெளிகருவி (Spray) மூலம் தெளிக்கப்பட வேண்டும்.
- பூசும் தடவைகள் : 01 - 02
- உலர்வதற்குச் செல்லும் காலம் : மேற்பரப்பு உலர்தல் : 30 நிமிடங்கள்
  மீண்டும் வர்ணம் தீட்டல் : 10 - 15 நிமிடங்கள்
  மட்டப்படுத்தி உலர்தல் : -
  முழுமையான உலர்தல் : 24 மணித்தியாலங்கள்
- உலர்ந்த படலத்தின் கன அளவு : 30-40 $\mu m$
- மேற்பரப்பில் பெயின்ட் பூசுதல் : N/A
- கலவை செய்து வைத்திருக்கக் கூடிய காலம் : N/A
- முக்கிய குறிப்பு : வெப்பத்தால் உலர்தல் மூலம் அல்லது நன்கு சூரிய ஒளி விழும் இடத்தில் வைத்தல் மூலம் நேர்த்தியான ரின்கல் முழுமையைப் பெறலாம்.

## கோஸ்வே புளோரஸன்ட் பெயின்ட் Causeway Fluorescent Paint

உலோகம், பிளாஸ்டிக், மரம் உட்பட எந்தவொரு பின்னணியிலும் வர்ணங்களது தோற்றப் பொலிவை மேம்படுத்தும், ஏனைய பெயின்ட் ரகங்களை விட 200% முதல் 400% வரை வர்ணத்தைப் பிரகாசமிக்கதாகக் காண்பிக்கும் பெயின்ட் வகையாகும். புளோரஸன்ட் பெயின்டை நேரடியாக வாகனங்களில் பூசக் கூடாததோடு மோட்டார் வாகனங்களின் அடிப்பூச்சாகப் பாவிக்கக் கூடியது. விசேடமாக நேரடியாய் சூரிய ஒளி படாத மேற்பரப்புகளுக்கு உசிதமானது.




- பொதி : 500ml/ 1 Litre / 4 Litre
